**தமிழ்நாடு அரசு**

**சுருக்கம்**

தமிழ் நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சி கழகம் லிமிடெட் 2007-2008 ஆம் ஆண்டுக்கான பகுதி II திட்டத்தின் கீழ் கன்னியாகுமரியில் நகர்புற கண்காட்சி திடல் அமைக்க ரூ.60.00 இலட்சம் ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர் (இ1) துறை

அரசு ஆணை (நிலை) எண்.84 நாள் 5.6.2007
சர்வசித்து, வைகாசி 22,
திருவள்ளுவர் ஆண்டு 2038

படிக்க:

தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சி கழக மேலாண்மை இயக்குநர் அவர்களின் ந.க.எண்.7673/DC/06, நாள் 2.2.2007

----

ஆணை:

இந்து மகாசமுத்திரம், வங்காள விரிகுடா, அரபிக்கடல் ஆகிய முக்கடலும் சங்கமிக்கும் இடமான கன்னியாகுமரி உலக அளவில் புகழ்பெற்ற சுற்றுலா தலமாக விளங்குகிறது. இந்திய சுற்றுலா வரைபடத்தில் கன்னியாகுமரி தனக்கென ஒரு தனியிடத்தை பெற்று விளங்குகிறது. பாரம்பரியமிக்க கலைப்பொருட்களை உற்பத்தி செய்வதற்கான இயற்கை வளங்களை போதுமான அளவில் பெற்றிருப்பதுடன் கன்னியாகுமரி கலையம்சம் கொண்ட சங்கு பொருட்கள், மரசிற்பங்கள், கையினால் செய்யப்படும் வாழ்த்து அட்டைகள், தேங்காய் ஓட்டினால் உருவாகும் கலைப்பொருட்கள், கலையம்சம் கொண்ட பொம்மைகள், வாழை நார்ப் பொருட்கள் ஆகிய பொருட்களின் உற்பத்தியில் முக்கியத்துவம் பெற்று விளங்குகிறது. ஆண்டு முழுவதும் கன்னியாகுமரிக்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் வருகை தருவதால் தமிழகத்தில் கன்னியாகுமரியில் ஒரு நகர்புற கண்காட்சி திடலை மத்திய, மாநில அரசின் நிதி உதவியுடன் அமைக்க தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சி கழகம் உத்தேசித்துள்ளது. இத்தகைய கண்காட்சித் திடல் ஒன்றை அமைப்பது கைவினைஞர்கள், நெசவாளர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் அனைவருக்கும் பயனுள்ள வகையில் அமையும் என்பதுடன் இக்கண்காட்சியில் ஒரு கூரையின் கீழ் தனித்தன்மை வாய்ந்த கைவினைப் பொருட்களையும், கைத்திறப் பொருட்களையும் வளம்பெற வைக்கவும் ஏதுவாக அமையும். மத்திய அரசு

இத்திட்டத்திற்கு கொள்கை அளவில் ஒப்புதலை வழங்கியுள்ளது. இக்கண்காட்சித் திடல் அமைக்க ஏற்படும் செலவின விபரம் கீழ்வருமாறு:-

| | |
|---|---|
| மத்திய அரசின் பங்கு | ரூ. 140.00 இலட்சம் |
| மாநில அரசின் பங்கு | ரூ. 60.00 இலட்சம் |
| | ரூ. 200.00 இலட்சம் |

2. எனவே கன்னியாகுமரியில் நகர்புற கண்காட்சி திடல் அமைப்பதற்காக மாநில அரசின் பங்கான ரூ.60.00 இலட்சத்தினை 2007–2008–ம் ஆண்டு பகுதி II திட்டத்தின் கீழ் வழங்கும்படி தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சி கழக மேலாண்மை இயக்குநர் அரசை கேட்டுக்கொண்டுள்ளார்.

3. தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சி கழகத்தின் செயற்குறிப்பினை அரசு கவனமாக பரிசீலனை செய்தது. பரிசீலனைக்குப்பின் 2007–2008ஆம் ஆண்டு பகுதி II திட்டத்தின்கீழ் கன்னியாகுமரியில் நகர்புற கண்காட்சி திடல் அமைக்க மாநில அரசின் பங்கான ரூ.60.00 இலட்சம் (ரூபாய் அறுபது இலட்சம் மட்டும்) தொடராச் செலவினம் வழங்க அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3–ல் கண்டுள்ள ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை கீழ்க்கண்ட தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படும்.

4851 கிராமத் தொழில்கள் சிறுதொழில்கள் குறித்த மூலதனச் செலவு
104 கைத்திறத் தொழில்கள் பதினொன்றாம் ஐந்தாண்டுத்
திட்டப்பணிகள் II மாநில திட்டம் JM கன்னியாகுமரி நகர்ப்பகுதியில்
ஒரு கைவினைஞர் மையம் அமைத்தல் 09 உதவி மானியங்கள் 03
குறிப்பிட்ட திட்டங்ங்ளுக்கான மானியங்கள்.

(DPC 4851 00 104 JM 0939)

5. மேற்கண்ட தலைப்புக் கணக்கை ஒத்திசைவு ( reconciling) கட்டுப்பாடு மற்றும் மதிப்பீடு செய்பவர் தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் ( Industries Commissioner and Director of Industries and Commerce) அவர்களுக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது.

6. முன்பக்கம் பத்தி 3ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையினைப் பெற்று மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சி கழகம் அவர்களுக்கு வழங்க தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் அவர்களுக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது.

7. மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சி கழகம் அவர்களால் மேலே பத்தி 3–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையினை 2007–2008ம் ஆண்டுக்குள் செலவு செய்து அது குறித்த அறிக்கையினை அரசுக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

8. இந்த ஆணை நிதித்துறையின் அ.சா.கு.எண்.1747/FS/P/2007, நாள் 3.6.2007–ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

விஷ்வநாத் ஷெகாவ்கர்
அரசுச் செயலாளர்

பெறுநர்
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சி கழகம், சென்னை–2.
தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர்,
சேப்பாக்கம், சென்னை–5.
தலைமைக் கணக்காயர், சென்னை–18.
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு) சென்னை–5.
மாநில தலைமைக் கணக்காயர் (A&E) சென்னை–18.
மாநில தலைமைக் கணக்காயர் (தணிக்கை) சென்னை–18.
ஆணையர், அரசு டேட்டா மையம், சென்னை–25.
நிதி (தொழில்கள்) BG (II), சென்னை–9.
கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர் (பி1) துறை, சென்னை–9.
இருப்புக்கோப்பு / உதிரி

/ஆணைப்படி / அனுப்பப்படுகிறது /

பிரிவு அலுவலர்

கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர் (இ1) துறை

கடித எண்.6218/இ1/2007–2 நாள் 11.7.2007

அனுப்புநர்
திரு. விஷ்வநாத் ஷெகாவ்கர், இ.ஆ.ப.,
அரசுச் செயலாளர்

பெறுநர்
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம்,
சென்னை–2.
தொழில் ஆணையர் மற்றும் இயக்குநர்,
தொழில் மற்றும் வணிகம்,
சேப்பாக்கம், சென்னை–5.

ஐயா,

பொருள்: தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் லிமிடெட் 2007–2008ம் ஆண்டுக்கான பகுதி II திட்டத்தின்கீழ் – கன்னியாகுமரியில் நகர்புற கண்காட்சி திடல் அமைக்க – ரூ.60.00 இலட்சம் ஒப்பளிப்பு – கணக்குத் தலைப்பில் திருத்தம் – வெளியிடப்படுகிறது.

பார்வை:
1 அரசு நிலை ஆணை எண்.84, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர் (இ1) துறை, நாள் 5.6.2007.
2 தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர், கடித எண்.26012/ஏபிஏ/2007, நாள் 19.6.2007.

––––

அரசு (நிலை) ஆணை. எண்.84, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர் (இ1) துறை, நாள் 5.6.2007ல் பத்தி 4–ல் கண்டுள்ள கணக்குத் தலைப்பிற்கு பதிலாக கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பு திருத்தம் செய்யப்படுகிறது.

## திருத்தம்

மேலே பத்தி 3–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை கீழ்க்கண்ட கணக்கு தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படும்.

" 4851-00- கிராமத் தொழில்கள், சிறுதொழில்கள் குறித்த மூலதனச் செலவு 104 கைத்திறத் தொழில்கள் பதினொன்றாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் II மாநில திட்டம் JN கன்னியாகுமரி நகரப்பகுதியில் ஒரு கைவினைஞர் மையம் அமைத்தல் – 09 உதவி மானியங்கள் 03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான மானியங்கள்.

(DPC எண்.4851 00 104 JN 0937)"

இக்கடிதம் நிதித்துறை அ.சா.கு.எண்.42130/Ind/07, நாள் 9.7.2007ன் ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

தங்கள் உண்மையுள்ள,

அரசு செயலாளருக்காக

நகல்:
தலைமைக் கணக்காயர், சென்னை–18.
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு) சென்னை–5.
மாநில தலைமைக் கணக்காயர் (A&E) சென்னை–18.
மாநில தலைமைக் கணக்காயர் (துணிக்கை 1) சென்னை–18.
ஆணையர், அரசு டேட்டா மையம், சென்னை–25.
நிதி (தொழில்கள்) BG (II), சென்னை–9.
கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர் (பி1) துறை, சென்னை–9.
இருப்புக்கோப்பு / உதிரி